## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்


இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் பொருத்தப்பாடு

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ரூபா 94,508 மில்லியன் நட்டத்தினை (வரிச் சீராக்கலின்றி) ஈட்டியிருந்ததுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் பாரிய நட்டங்கள் ஈட்டப்பட்டிருந்தமை காரணமாக 2011 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 131,324 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்து நிலையைக் கொண்டிருந்தது. ஆகையால் இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை ஐயத்திற்குரியதாகும். மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் மற்றும் தேறிய சொத்து நிலைமை என்பன கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




### 1.2.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான ஒன்றிணைந்த வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஜனவரி 15 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்ஏஎஸ்) இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுத் திறைசேரியால் வைத்திருக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய ஸ்ரோரேஜ் ரேமினல் (சீபீஎஸ்ரீஎல்) கம்பனியின் மொத்தப் பங்குகளில் மூன்றில் ஒருபங்கு, 2009 சனவரி 01 முதல் அமுலுக்குவரும் வகையில் 2009 ஒக்தோபர் 21 இல் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டது. அதன் விளைவாக, சீபீஎஸ்ரீஎல் இன் மொத்தப் பங்குகளில் கூட்டுத்தாபனத்திற்கான உரிமைத்துவம் 2/3 வரை அதிகரித்திருந்தது. அதன் படி, இலங்கை கணக்கீட்டு நியம இல. 26 இன் பிரகாரம் துணைக்கம்பனிகளில் அதன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு ஒன்றிப்புச் செய்யப்பட்ட 2010 இலும் அதனைத் தொடர்ந்தும் கூட்டுத்தாபனம் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல்

வேண்டும். இருப்பினும், சீபீஎஸ்ரீஎல் இன் கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனம் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 – பொறிகள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் இல் குறிப்பிடப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியில் நிச்சயிக்கப்பட வேண்டிய சொத்துக்களின் முன்கொண்டு சென்ற தொகைகள் அவற்றின் நியாயமான பெறுமதியிலிருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் அதன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்திருக்கவில்லை. மேலும், முழுமையாகத் தேய்விடப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 3,130 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்ஏஎஸ் 41 – வழக்கிழந்த சொத்துக்கள் இனால் வேண்டப்பட்டவாறு ரூபா 10,891 மில்லியன் தொகையான வழக்கிழந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அடையாளப்படுத்தலை இனங்காண்பதற்காக கூட்டுத்தாபனத்தினால் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எஸ்எல்ஏஎஸ் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 43.4 மில்லியன் ஐயக்கடன் ஏற்பாட்டினை ஐந்தொகையின் முகப்பில் காண்பிக்காது வியாபார வருமதி மீதிகளிற்கெதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. அத்துடன், ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் முன்னொண்டு செல்லப்பட்ட ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகை எஸ்எல்ஏஎஸ் 36 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் இனால் வேண்டப்பட்டவாறு வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியுள்ள நீண்டகாலமாக நிலுவையாகவிருக்கின்ற மீதிகளின் விபரங்கள் வருமாறு.

| **விடயம்** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
|---|---|
| | **ரூபா** |
| விநியோகத்தர் | 790,349,862 |

| | |
|---|---:|
| விமானச்சேவை | 14,710,932,214 |
| மின்வலு பொறிகள் | 8,974,762,742 |
| அரசாங்க பாவனையாளர்கள் | 90,024,815,525 |
| தனியார் பாவனையாளர்கள் | 263,130,856 |
| விவசாய இரசாயணம் | 22,917,925 |
| ஏனையோர் | 283,926,228 |
| **மொத்தம்** | **115,070,835,353** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறித்த நிலுவைகளிற்கான காலப்பகுப்பாய்வு விபரங்கள் பல தடவைகள் கோரப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை. அதன்படி, கூட்டுத்தாபனத்தினால் அத் தகவல்கள் முறைப்படி பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நான்கு தனியார் விநியோகத்தர்கள், ஒரு மின்வலுப் பொறி வாடிக்கையாளர், ஓர் தனியார் விமானச்சேவை வாடிக்கையாளர் ஆகியோருக்கு 25.1 மில்லியன் மற்றும் மூன்று அரசாங்க வாடிக்கையாளர்களிற்கு ரூபா 24 மில்லியன் கடன் வசதிகளை அவர்களது வங்கி உத்தரவாதத்திற்கும் மேலாக கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறவேண்டிய தொகை ரூபா 67,259 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 50,500 மில்லியன் தொகை 2012 சனவரி 04 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட்டது.

(ஈ) ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் நிலுவையாகக் காணப்படுகின்ற எல்லாக் கடன்பட்டோர்களிடமிருந்தும் கூட்டுத்தாபனம் வழமையாக உறுதிப்படுத்தல் களைக் கோருகின்றது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதியான (ஐக்கடன் ஏற்பாட்டுக்கு முன்னர்) ரூபா 115,070.8

மில்லியன் தொகையான மொத்த நிலுவை மீதியில், 114 கடன்பட்டோர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 69,132 மில்லியன் தொகையான மீதிகளை குறித்த கடன்பட்டோர்கள் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அதன்படி, பேரேட்டு மீதிக்கும் தொடர்புடைய கடன்பட்டோர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளிற்கும் இடையே ரூபா 87,000 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| கடன்பட்டோர் எண்ணிக்கை | பேரேட்டு மீதி | கடன்பட்டோர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி | பேரேட்டு மீதிக்கும் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளிற்கும் இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 49 | 47,220 | இல்லை | 47,220 |
| 38 | 1,753 | 1,402 | 351 |
| 27 | 20,159 | 60,288 | 40,129 |
| | மொத்தம் | | 87,700 |

(i) பூச்சிய மீதிகளாக உறுதிப்படுத்தியிருந்த 49 கடன்பட்டோர்களுடன் தொடர்புடைய ரூபா 47,220 மில்லியன் தொகையான பேரேட்டு மீதியில் தொழில் முயற்சி வளத் திட்டமிடல்/முறைமைப் பிரயோக மற்றும் தரவுச் செயன்முறைப்படுத்தல் முறைமைக்கான உற்பத்திகள் (ஈஆர்பீ/எஸ்ஏபீ) என்பவற்றின் அமுலாக்கள் தவறு காரணமாக 06 விநியோகத்தர்கள் தொடர்பில் ரூபா 4.5 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(ii) மேலும், மேற்குறித்த மொத்த நிலுவையில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 8 மில்லியன் மீதிகள் மறுதளிக்கப்பட்டிருந்தன.

(iii) கூட்டுத்தாபனத்தின் பேரேட்டு மீதிகளிற்கும் குறைவான தொகையில் தமது மீதிகளை உறுதிப்படுத்தியிருந்த 38 கடன்பட்டோர்களில் இரண்டு கடன்பட்டோக்ளுடன் தொடர்புடைய ரூபா 2.7 கூட்டுத்தொகையான மீதிகள் மறுதளிக்கப்பட்டிருந்தன.

(iv) 27 வாடிக்கையாளர்களின் பேரேட்டில் உள்ள மீதிகளை ரூபா 40,129 ஆல் மிகைத்து அவர்கள் மீதிகளை உறுதிப்படுத்தியிருந்தனர்.

(உ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 115,070.4 மில்லியன் மொத்தக் கடன்பட்டோர் மீதிகள் (ஐயக்கடன் ஏற்பாடுக்கு முன்னர்) அடங்கலாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,725 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதிகளில் 41 சதவீதமானவை ஒன்று தொடக்கம் பதினெட்டு ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் முறைமைச் செயற்பாட்டின் (எஸ்ஏபீ) படி, விற்பனையின் போது காசாக கொடுப்பனவு செய்வதற்கு வன் காசு வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களிற்கு எவ்வித கடன்வசதிகளும் வழங்கப்படுவதில்லை. இருப்பினும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வகையான வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 21.6 மில்லியன் மீதி நிலுவையாக காணப்பட்டது.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை கீழே காட்டப்பட்ட வேண்டப்பட்ட சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியவில்லை.

(அ) முத்துமுராஜவெலையிலுள்ள ரூபா 259 மில்லியன் பெறுமதியான 25 ஏக்கர் காணி பேரேட்டில் ஒரு சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும் காணியின் உரித்துடைமையை நிறுவுவதற்காக உரித்துடைமை உறுதிகள் அல்லது சுவீகரித்தற் கட்டளைகள் எதுவும் தரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதும் வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டதுமான ரூபா 714 மில்லியன் தொகையான கலால் வரியின் அறவீட்டுத் தன்மை மற்றும் உள்ள தன்மையை பரிசிலிப்பதற்கான போதிய சான்றுகள் தரப்பட்டிருக்கவில்லை.

(இ) மோட்டார் வாகனங்கள் தொடர்பான பதிவேடுகளின் நலிவான பேணுகை

(i) கிடைக்கக்கூடியதாவிருந்த தகவல்களின் படி, கூட்டுத்தாபனத்தினால் அதற்குச் சொந்தமான வாகன அணி தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. பல்வேறு தடவைகள் கோரப்பட்ட பின்னரும் கூட பின்வரும் தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. ஆகையால், கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட செலவினங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

- ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்கள் மீதான இழப்புகள்
- கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட குழுப் போக்குவரத்து விபரங்கள்
- கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட குழுப் போக்குவரத்து வசதிக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் விபரங்கள்
- குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களின் விபரங்கள்

### 1.2.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழகாட்டல்கள் மீதான பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் | |
| (i) பிரிவு 3.2 | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை பெற்றோலிய தொழிற் துறையைச் சேர்ந்த ஒரு உறுப்பினரையாவது உள்ளடக்கியிருக்கவில்லை. |
| (iv) பிரிவு 4.2.2 | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக் |

| | |
|---|---|
| | கூட்டங்கள் 2011 சனவரி, மார்ச், மே, யூலை, ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்றிருக்கவில்லை. |
| (ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க சுற்றுநிருபம். | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை 04 தொடக்கம் 14 மாதங்கள் வீச்செல்லையான காலமாக வெற்றிடமான பதவிகளிற்கான பணிகளை 05 உத்தியோகத்தர்கள் கவனிக்கின்றனர். |

### 1.2.7 போதிய அதிகாரத்தால் ஆதராப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.3 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தால் உழைக்கப்பட்ட இலாபத்திலிருந்து ஊழியர்களிற்கு மிகையூதியம் வழங்கப்படவேண்டும். இருந்த போதிலும் கூட்டுத்தாபனம் சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் நட்டத்தை அடைந்திருந்த போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாது 2008, 2009 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகள் முறையே ரூபா 147 மில்லியன் ரூபா 148 மில்லியன் ரூபா 179 மில்லியன் மற்றும் ரூபா 175.6 மில்லியன் தொகையான மிகையூதியம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

### 1.2.8 ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல்

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் கூட்டக் குறிப்புக்களின்படி, சர்வதேச நடுவர் தீர்ப்பின் லண்டன் நீதி மன்றத்தில் நடுவர் தீர்ப்பு நடைமுறைகள் நடைபெறுகின்றன. பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஹெட்ஜிங் ஒப்பந்தங்கள் தொடர்பான நடுவர் தீர்ப்பு செயற்பாடுகளில் கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாகக் கலந்துகொள்கின்றது. சாவ்தேச நடுவர் தீர்ப்பின் லண்டன் நீதிமன்றத்தில் இந்த செயற்பாடுகளின் பெறுபேறுக்கு காத்திருந்தமையால் கூட்டுத்தாபனத்தில் விளைவுகள இனங்கண்டு கொள்ளப்படவில்லை. *''கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தவாறு, தரப்பினர்களிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த தீர்ப்பனவு உறுதியின் கீழ் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கிக்கு (எஸ்சீபீ) யூஎஸ்டொலர் 60 மில்லியன் தொகையினை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2013 யூன் 03 ஆந் திகதி எஸ்சீபீ இற்கு கொடுப்பனவை அனுப்பியிருந்தது''.*

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 94,508 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய நட்டமான ரூபா 26,923 மில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதிசார் விளைவுகளில் ரூபா 67,585 மில்லியனான மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. வரையறுத்த ஸ்ரீ லங்கன் விமானச் சேவைக்கும் மிஹின் லங்கா (தனயார்) கம்பனிக்கும் சகாய விலையில் எரிபொருள் வழங்கப்படுதல், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதிலுள்ள வினைத்திறனின்மைகள், சீஈபீ இற்கு மானிய விலையில் சுத்திகரித்த எண்ணையை வழங்குதல், முறையான இருப்பு மட்டங்களை பேணும் வேலைத்திட்டம், களஞ்சிய வசதிகள் போன்றன இல்லாமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணிகளாகும்.

#### 2.1.2 நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமையின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் பகுப்பாய்வுகள் மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனத்தின் முகாமைத்துவத்தில் குறைந்த செயலாற்றலைக் தெளிவாகக் காட்டுகின்றது.

(i) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நடப்பு விகிதமாக காட்டப்பட்ட 0.58 தடவைகளை முன்னைய ஆண்டிற்கான 0.82 தடவைகளுடன் ஒப்பிடுகையில் சிறிய சரிவுப்போக்கை காட்டிய அதேநேரம் திரவ விகிதம் மீளாய்வாண்டினிறுதியில் 0.57 தடவைகளிலிருந்து 0.45 தடவைகளாகக் குறைவடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை பாதகமாக காணப்பட்டமையை இந்நிலமை தெளிவாக காட்டுகிறது.

(ii) ஆண்டிற்கான கடன்பட்டோர் புரள்வு விகிதமானது முன்னைய ஆண்டிற்கான 3.4 தடவைகளுடன் ஒப்பிடுகையில் 3.7 தடவைகளாக காட்டப்பட்டதுடன் கடன் சேகரிக்கும் காலம் முன்னைய ஆண்டிற்கான 108 நாட்களுடன் ஒப்பிடுகையில் 99 நாட்களாகக் குறைவடைந்திருந்தயைால் கடன் சேகரிப்புச் செயலாற்றலில் சிறியளவு முன்னேற்றமிருந்ததை காட்டுகின்றது.

(iii) இருப்பு தேங்கியிருக்கும் காலம் முன்னைய ஆண்டிற்கான 46 நாட்களிற்குகெதிராக 34 நாட்களாக குறைவடைந்திருந்தமை இருப்புப் புரள்வில் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

(iv) ஆண்டிற்கான கடன்கொடுத்தோர் புரள்வு விகிதமானது முன்னைய ஆண்டிற்கான 2.3 தடவைகளுடன் ஒப்பிடுகையில் 3.1 தடவைகளாக காட்டப்பட்டமையால் கடன்கொடுப்பனவுக் காலம் முன்னைய ஆண்டிற்கான 158 நாட்களுடன் ஒப்பிடுகையில் 117 நாட்களாக குறைவடைந்திருந்தது.

(v) ரொக்க செயற்பாட்டு சுழற்சி முன்னைய ஆண்டின் 5 நாட்களிற்கெதிராக 15 நாட்களாக அதிகரித்திருந்ததுடன் அது 20 நாட்கள் அதிகரிப்பைக் காட்டுவதுடன் தொழிற்படு மூலதன பிரச்சினை அதிகரிப்பு இதற்கு தாக்கமளித்திருந்தது.

(vi) மீளாய்வாண்டிற்கான கடன் உரிமை மூலதனத்துக்கான கடன் 2010 ஆம் ஆண்டிற்கான 47:(37) உடன் ஒப்பிடுகையில் 151:(131) ஆக அதிகரித்திருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த உரிமையாண்மை எதிர்மறைத் தொகை ரூபா 94 பில்லியனால் அதிகரித்திருந்தது.

(vii) மீளாய்வாண்டிற்கான மொத்தலாப எல்லை, முன்னைய ஆண்டிற்கான எதிர்மறையான 3.6 சதவீதத்துடன் ஒப்பிடும்போது எதிர்மறையான 20.1 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த நட்டம் ரூபா 62.3 பில்லியனால் (71.6 - 9.3) அதிகரித்திருந்தது.

(viii) ஈடுபடுத்தப்பட்ட மூலதன வருவாய் வீதம் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் எதிர்மறையான போக்கைக் காட்டியது.

(ix) மொத்தச் சொத்துக்களின் வருவாய் வீதம் முன்னைய ஆண்டின் எதிர்மறையான 18 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் எதிர்மறையான 51 சதவீத்தைக் காட்டியது.

(x) வட்டிக் காப்பு விகிதம் முன்னைய ஆண்டிற்கான எதிர்மறையான 2.9 தடவைகளுடன் ஒப்பிடுகையில் 9.5 ஆன எதிர்மறையான தடவைகளைக் காட்டுகின்றது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரவ பெற்றோலிய எரிவாயு விற்பனை சம்பந்தமாக ஒரு தனியார் எரிவாயுக் கம்பனிக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை 2006 ஒக்தோபர் 20 இல் காலாவதியாகியிருந்தது. எனினும் ஒரு புதிய உடன்படிக்கை செய்யாமல் அல்லது அந்த உடன்படிக்கையினைப் புதுப்பிக்காது அக்கம்பனிக்குத் தொடர்ந்தும் திரவ பெற்றோலிய எரிவாயுவை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. அதற்குப் பதிலாக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரால் வழங்கப்பட்ட கடிதத்தின்படி எரிவாயு விநியோகம் தொடர்ந்தும் இடம்பெறுகிறது. மேலும், உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் மற்றுமோர் தனியார் கம்பனிக்கு கூட்டுத்தாபனம் திரவ பெற்றோலிய எரிவாயுவை வழங்கியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சில உற்பத்திகளை உற்பத்திக் கிரயத்திலும் பார்க்கக் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அந்த நட்டத்தை ஏற்படுத்தும் உற்பத்திகள் பாரிய தேறிய நட்டத்திற்கும் அதேபோல் மீளாய்வாண்டின் முடிவிலுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் எதிர்மறையான சொத்து நிலைமைக்கும் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்பு செய்திருப்பதாகத் தெரிகின்றது. *''கூட்டுத்தாபன தலைவரின் கருத்துப் படி, அரசாங்கக் கொள்கை காரணமாக அனேகமான பொருட்கள் மானிய விலைகளில் விற்பனை செய்யப்பட்டிருந்தன.''*

விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| உற்பத்தி | விற்பனைப் பெறுமதி | விற்பனைக் கிரயம் | மொத்த நட்டம் | 2011 ஆம் ஆண்டு இறுதியில் தேறிய இலாபம் |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| எரிபொருள் எண்ணை 3500 (சக்தி) | 165,800 | 200,392 | 34,592 | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான (வரிக்கு முந்திய) தேறிய நட்டம் ரூபா 94,509 மில்லியன் தொகையானதுடன் மின்சார உற்பத்திக்கான எரிபொருள் எண்ணை மற்றும் லங்கா ஒடோ டீசல் முறையே ரூபா 27,783 மில்லியன் மற்றும் ரூபா 34,592 மில்லியன் மொத்த நட்டத்திற்குப் பங்களிப்பு செய்திருந்தன. |
| எரிபொருள் எண்ணை 1500 (சக்தி) | 10,823 | 19,197 | 8,374 | |
| எரிபொருள் எண்ணை (ஏனையவை) | 25,458 | 44,867 | 19,409 | |
| விவசாய இரசாயனங்கள் | 13,710 | 19,888 | 6,179 | |
| எல்பீஜீ | 2,319 | 2,463 | 144 | |
| மண்ணெண்ணை | 12,804 | 19,541 | 6,736 | |
| எரிபொருள் எண்ணை (ஆழ்குழிகள்) | 3,647 | 4,065 | 417 | |
| நெப்தா | 4,331 | 4,829 | 498 | |

### 2.2.2 கூட்டுத்தாபனத்தின் வளங்கள் ஏனைய அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.4 ஆம் பிரிவின் படி, பொது முயற்சியொன்றின் ஊழியர் ஒருவர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அமைச்சிற்கு அல்லது வேறோர் நிறுவனத்திற்கு விடுவிக்கப்படலாகாது என்பதுடன் அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்கு அக்காலப்பகுதிக்காக தொழில்முயற்சியால் எவ்வித ஊதியமும் செலுத்தப்படக்கூடாது. இருப்பினும், அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஆறு அரசாங்க நிறுவனங்களிற்கு 28 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.9.3 ஆம் பிரிவின் படி, பொது முயற்சியொன்று அதன் வரிசை அமைச்சு அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்காக எந்தவொரு நிலமையின் கீழும் செலவொன்றை செய்வதற்கோ அல்லது அதன் வளங்களை ஈடுபடுத்தவோ அனுமதித்திருக்கவில்லை. மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கும் 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அதிமேதகு சனாதிபதி அவர்களின் கடிதத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1997 சனவரி 24 ஆந்

திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக பல எண்ணிக்கையான வாகனங்கள் வரிசை அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களிற்கும் மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

### 2.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் அந்த வியாபாரத்தை மேற்கொள்ளும் நோக்குடன் 2008 ஏப்ரலில் ஒரு தனியார் கம்பனியினூடாக ஆழ்குழித் தாங்கிகளை அமைக்கும் வணிகத்தை மேற்கொண்டது. கூட்டுத்தாபனத்தின் படி, வியாபாரத்தின் ஆரம்பத்தில் சந்தையிலுள்ள ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிடக்கூடிய வேறுபட்ட தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்காமையால் சூழ்நிலை கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக இருக்கவில்லை. ஆகையால், 2008 ஏப்ரல் தொடக்கம் 2008 திசெம்பர் மற்றும் 2009 சனவரி தொடக்கம் 2009 மே வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் ஒரு தனியார் கம்பனிக்கு எரிபொருளை குறைந்த விலையில் விற்பனை செய்திருந்ததுடன் அதன் விளைவாக ஆழ்குழி வியாபாரத்திலிருந்து கூட்டுத்தாபனம் முறையே ரூபா 85.2 மில்லியன் மற்றும் ரூபா 125 மில்லியன் (அண்ணளவாக) நட்டங்களை அடைந்திருந்தது. எனினும், கூட்டுத்தானம், 2009 ஏப்ரலிருந்து ஆழ்குழித் தாங்கி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்காததுடன், 2011 திசெம்பா 31 இல் உள்ளவாறு ஜெயா கொள்கலன் இறங்குதுறை எண்ணை குதத்தில் இருப்புக்களாக இருந்த இருப்பின் பெறுமதி (அண்ணளவாக) ரூபா 2.17 மில்லியனாகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் விலையிடல் கொள்கையின் படி, குறித்த இட வாடிக்கையாளர் விலையிலும் பார்க்க குறைந்த விலையில் குறித்த இட வாடிக்கையாளர் விலையிலும் அவ்வாறே ஒப்பந்த வாடிக்கையாளர் விலையிலும் விமானச்சேவை டோர்பைன் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானச்சேவை மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி என்பன ஒப்பந்த வாடிக்கையார்களாக காணப்பட்ட போதிலும், ஒப்பந்த வாடிக்கையாளர் விலையினைக் காட்டிலும் குறைந்த சகாய விலை வீதங்களில் அவற்றிற்கு எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி இரண்டு கம்பனிகளிற்கும் வழங்கப்பட்ட சகாய விலை வீதங்கள் நிலையான கிரயத்திலிருந்து (கேள்வு, காப்புறுதி, களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்) விசேட வீதங்களை

(தொகைகளை) கழித்துப் பெறப்படும் அடிப்படையில் கணிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | ஒரு பீப்பாய் எரிபொருளின் நிலையான கிரயத்திலிருந்து கழிக்கப்பட்ட தொகை |
|---|---|
| | யூஎஸ்டொலர் |
| வரை.ஸ்ரீ லங்கன் விமானச்சேவை | 0.13 |
| வரை. மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | 0.03 |

அதன்படி, வாடிக்கையாளர் ஒப்பந்த விலையுடன் ஒப்பிடுகையில், வரையறுத்த ஸ்ரீ லங்கன் விமானச்சேவை மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆகியவற்றிற்கு சகாய விலையில் விமானங்களிற்கான டர்பைன் எரிபொருளை விற்பனை செய்திருந்தமை தொடர்பில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனம் முறையே ரூபா 470.41 மில்லியன் மற்றும் ரூபா 548.49 மில்லியன் நட்டங்களை ஈட்டியிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைகள் | |
|---|---|---|
| | **2011** | **2010** |
| | **ரூபா** | **ரூபா** |
| வரை.ஸ்ரீ லங்கன் விமானச்சேவை | 12,351,426,871 | 541,542,674 |
| வரை. மிஹின் லங்கா (தனியார்) கம்பனி | 1,227,020,419 | 361,235,191 |

அதற்கமைய, ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் 2008 முதல் நிலவும் எதிர்மறை உரிமைத்துவ நிலைமையினைக் கருத்திற்கொள்ளாது, மேற்படி கம்பனிகள் முறிவடையும் அபத்தான நிலையில் தொடர்ச்சியாக நட்டமீட்டிவருகின்ற போதிலும், அவ்விரண்டு கம்பனிகளிற்கும் கூட்டுத்தாபனம் சகாய விலையில் டர்பைன் எரிபொருளை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 முகாமைததுவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பாரிய தொழிற்துறைப் போட்டியாளரான இந்தியன் எண்ணைக் கம்பனியின் (தாய்க் கம்பனி) உதவியுடனான வ/ப இலங்கை பெற்றோலியக் குத இறங்குதுறை மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில் முயற்சி வளத்திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமைக்கு கூட்டுத்தாபன தரவு அடிப்படையின் துறையில் ஈடுபடுத்துவதிலான ஆபத்து பற்றி முறையான மதிப்பாய்வு எதுவும் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நோக்கத்திற்காக தனது வளங்களின் (மூலதனம் மற்றும் மனித இரண்டும்) குறிப்பிடத்தக்க அளவை ஈடுபடுத்தும் கடப்பாட்டை கூட்டுத்தாபனம் கொண்டிருந்தமையால், இந்த முறைமை ஒருங்கிணைப்பினூடாக எழக்கூடிய பயனுறு விளைவு பற்றி முறையான மற்றும் ஆழமான பகுப்பாய்வுகள் தொழில்முயற்சி வளத் திட்டமிடல் முறைமைகளின் துறையிலான நிபுணர்களின் உதவியுடன் மேற்கொண்டிருத்தல் வேண்டும். மேலும் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் அதன் அமுலாக்கலின் முன்னர் அவரவர்களுக்கு உரிய பொறுப்புக்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் வ/ப இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறை மற்றும் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனி என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் வ/ப இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்முயற்சி வளதிட்டமிடல் முறைமையுடன் ஒத்திருக்க வேண்டிய கூட்டுத்தாபனத்தால் அதன் உபகரணங்கள் முதலியவற்றை மேம்படுத்துவதற்காக செய்யப்பட்ட மூலதன மற்றும் மனிதவளங்களிற்கு அப்பால் குறிப்பிடத்தக்களவான செலவைக் கவனத்தில் கொண்டு முற்பாதுகாப்பு நடவடிக்கையாக உடன்படிக்கை/விஞ்ஞாபனத்தை வைத்திருப்பது மிக முக்கியமானதாகும்.

(ஆ) கூட்டுத்தாபனம் பல்வேறு முதலீட்டுத் தொகுதிகளில் ரூபா 5,037 மில்லியன் தொகையான (சீபீஎஸ்ரீஎல் இல் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,000 மில்லியன் அடங்கலாக) பாரிய முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. எனினும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த முதலீடுகளிலிருந்து (ரூபா 3,000 மாத்திரம்) குறிப்பிடத்தக்க வருமானமெதுவும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்வதற்கு முன்னர்

முதலீட்டின் மீதான திரும்பல் தொடர்பில் முறையான அவதானம் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) சீனக்குடா நிறுவுகை தொடர்பான உடமைகொள்ளல் மற்றும் விடயங்களை பொறுப்பேற்பது தொடர்பாக 2003 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனி, மற்றும் இலங்கை அரசாங்கம் மற்றும் கூட்டுத்தாபனம் என்பற்றுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, களஞ்சிய வசதிகளையும் காணியையும் சொல்லப்பட்ட கம்பனிக்கு முப்பத்தைந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு கொடுக்க உடன்பாடு காணப்பட்டதுடன் உடன்படிக்கைத் திகதியிலிருந்து 06 மாதங்களிற்கிடையில் குத்தகை உடன்படிக்கை நிறைவேற்றப்படவேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் இது வரை எதுவித குத்தகை உடன்படிக்கைகளையையும் செய்திருக்காததுடன் ஏற்கனவே அந்த வசதிகள் பயன்படுத்தப்பட்ட போதிலும், 2003 பெப்ரவரியிலிருந்து அந்தக் கம்பனியால் களஞ்சிய வசதியின் பயன்படுத்தலிற்காக அந்தக் கம்பனியிடமிருந்து குத்தகை வாடகைகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் முடிவடைந்த பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் மீது தாமதக் கட்டணங்களாக கூட்டுத்தாபனத்தினால் யூஎஸ்டொலர் 795,393.7 செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.5 பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல்.

பொது முயற்சிகளின் குழுவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட நெறிப்படுத்தலின் கீழ் 2011 யூன் 01 முதல் 2012 யூன் 30 வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் நான் விசேட கணக்காய்வொன்றை நடாத்தியிருந்ததுடன் அதன் மீதான அறிக்கை 2013 யூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதன்படி, விரிவான கொள்வனவுத் திட்டமொன்று இன்மை, கொள்வனவு நடைமுறையிலுள்ள பலவீனங்கள், உரிய நேரத்தில் ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளத் தவறியமை, ஒருங்கிணைந்த தொடர்பாடல் காணப்படாமை, மற்றும் நிச்சயமற்ற சந்தைச் சவால்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்கள் இன்மை, மேலதிகக் கொடுப்பனவுகள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கட்டளைகளை இடுவதில் தாமதங்கள் உயர் மற்றும் தாழ் ஒக்டேன் பெற்றோலின் சிக்கனமற்ற பெறுகைகள் போன்ற வினைத்திறனின்மைகள் காரணமாக 2011 யூன் 01 முதல் திசெம்பர் 31 வரையான குறுகிய 07 மாத காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 5.1 பில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் பிரபல்யத்திற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அவ்விடயங்கள் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.
மீளாய்வுக்குற்பட்ட தொடர்புடைய ஆண்டிற்கான மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பிரதான விடயங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **பெறுமதி** | | | |
|---|---|---|---|---|
| | **ஜீபீபீ** | **யூஎஸ்டொ** | **நாணயமாற்று வீதம்* ரூபா** | **ரூபா** |
| வெளிநாட்டு கப்பல் தரகர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளை இரத்துச் செய்தமையால் செலுத்தவேண்டிய நடுவர் தீர்ப்பு கோரிக்கைகள் மற்றும் சட்டக் கிரயங்கள் | - | 750,246.83 | 127.1608 [1] | 95,401,987 |
| -மேற்படி- | 6,590 | - | 205.4728 [1] | 1,354,066 |
| பீ/எல் மாதத்தில் எந்தவொரு ஐந்து நாட்களிற்கும் சமவீத (பிலேட்ஸ்) விலைகளை பயன்படுத்துவதற்கு வழங்குனர் (சிங்கப்பூரை தளமாகக் கொண்ட எண்ணைய் கம்பனி) அனுமதிக்கப்பட்டிருந்தமையின் விளைவாக கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டம் (பீகே/52/2011, பீகே/53/2011, பீகே/56/2011, பீகே/58/2011, பீகே/59/2011,) | - | 6,798,029.39 | 114.1444 [2] | 775,957,089 |
| வழங்குனரின் விலைப்பட்டியல் பெறுமதியிலிருந்து வெளியேறிய தொகை நட்டங்களை கழித்திருந்தமை காரணமாக கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டம் பீகே/10/2011 | - | - | - | 10,097,359 |
| கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் செயற்திறனின்மை மற்றும் இறங்குதுறை குறைபாடுகள் காரணமாக வழங்குனர்களால் கோரப்பட்ட தாமதக் கட்டணங்கள் | - | 795,393.71 | 127.1608 [1] | 101,142,900 |

| | | | | |
|---|---|---|---|---|
| உரிய வேளைகளில் கப்பல்கள் வருகை தந்திருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் பொருட்களை அகற்றும் செயன்முறையின் தாமதத்தினால் ஏனைய வழங்குனர்களால் கோரப்பட்ட தாமதக் கட்டணங்கள் | - | 96,933.20 | 127.1608 [1] | 12,326,103 |
| பாவனைக்குதவாத கேசோலைன் (92 ஒக்டேன்) இன் கொள்வனவிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவு பீகே/17/2011 | - | 20,293,127.00 | 114.8172 [2] | 2,330,000,000 |
| கூட்டுத்தாபனத்தினால் சந்தைக்கு விடுவிக்கப்பட்ட பாவனைக்குதவாத எரிபொருளை பயன்படுத்தியமையால் சேதமடைந்த வாகனங்களிற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் பீகே/17/2011 | - | - | - | 28,000,000 |
| எரிபொருள் எண்ணையை இறக்குமதி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதில் தாமதங்கள் காரணமாகவும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய மின்சாரத் தடையினைத் தவிர்ப்பதற்காக உயர் காப்பீட்டுக் கட்டணத்தின் அவசர அடிப்படையில் ஏனைய வழங்குனர்களிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டங்கள் பீகே/49/2011 | - | 521,500.00 | 127.1608 [1] | 66,314,357 |
| தொகை அடிப்படை எயார் இலிருந்து வெக்கும் அடிப்படைக்கு மாறியமையின் விளைவாக கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டங்கள் பீகே/011/2011 | - | 36,134.27 | 127.1608 [1] | 4,594,863 |
| குறைந்த கந்தக எரிபொருள் எண்ணையை வழங்குவதற்கு தீர்மானம் மேற்கொள்வதில் தாமதம் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டங்கள் பீகே/45/2011 | - | - | - | 37,224,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| குறைந்த கந்தக எரிபொருள் எண்ணைக்குப் பதிலாக ஒட்டோ டீசலை விற்பனை செய்திருந்தமையால் கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டங்கள் | - | - | - | 1,114,344,000 |
| ஆறு மாதங்களிற்கான எரிபொருள் தேவையினை குறைத்த மதிப்பிட்டு வழங்கனர்களிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையின் விளைவாக ஏற்பட்ட நட்டங்கள் | - | 1,515,968.00 | 127.1608 [1] | 192,771,704 |
| தவணை ஒப்பந்தங்களின் கீழ் பெற்றோலை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் இணங்காமை மற்றும் முன்னைய சில மாதங்களிற்கான சராசரி வட்டத்திலும் பார்க்க உயர்வான வட்ட விலைகளில் உரிய நேர கேள்விமனு அடிப்படையில் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை காரணமாக கூட்டுத்தாபனத்தினால் ஈட்டப்பட்ட நட்டங்கள் | - | 2,422,571.00 | 127.1608 [1] | 308,056,066 |
| முதலாவது அளிப்பை இரத்துச்செய்து கேள்வி மனுக்களை மிதக்கவிட்டமையின் விளைவாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட நட்டம் | - | 43,213.33 | 127.1608 [1] | 5,495,042 |
| **மொத்தம்** | | | | **5,083,079,536** |

* நாணயமாற்று வீதங்கள்:

*2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய வங்கியின் அறிக்கைகளின் படி நாணயமாற்று வீதங்கள்*

*(சர்வதேச நாணயங்களின் நாளாந்த குறிகாட்டி வீதங்கள் – 2012.12.31)*

| ***நாடு*** | ***நாணயம்*** | ***குறிகாட்டி வீதம் (ரூபா)*** |
|---|---|---|
| *ஐக்கிய இராச்சியம்* | *பவுன்* | *205.4728* |
| *ஐக்கிய அமெரிக்கா* | *டொலர்* | *127.1608* |

***2.*** *உள்ளபடியான வீதங்கள்*

### 2.2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் சொத்துக்கள், அந்தச் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தாது வைத்திருக்கப்பட்டிருந்தன.

| | சொத்தின் தன்மை | கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) | வனாத்தமுல்லை கலகஹகும்புற காணி | எல்பீ எரிவாயு செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய நோக்கங்களிற்காக இந்தக் காணி ரூபா 10.6 மில்லியனிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அது 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை உரிய நோக்கங்களிற்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மகென காணி | தரப்பட்ட கடிதத் தொடர்புகளின்படி, இந்தக் காணியின் சுவீகரிப்பிற்காகச் ரூபா 0.625 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது. எனினும் இந்தக் காணி கூட்டுத்தாபனத்தின் பதிவேடுகளில் கணக்கிடப் பட்டிருக்காததுடன் அது 1986 இலிருந்து முன்னைய சொந்தக்காரால் பயன்படுத்தப்படுகிறது. |

### 2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபன தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(ஆ) கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டியவை

(இ) கடன்கொடுத்தோர்கள் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை

(ஈ) கணக்கீடு

(உ) சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்குதல்

(ஊ) கொள்வனவுகள்

(எ) வளங்களின் பயன்படுத்தல்

(ஏ) மனிதவளங்கள் முகாமைத்துவம்

(ஐ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஒ) மிகையூதிய கொடுப்பனவு